முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான்

**எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்**

**சோபகிருது வருடம் தை மாதம் 14 திகதி முதல்**

**சோபகிருது வருடம் தை மாதம் 21 திகதி வரை**

**(28.01.2024 ஞாயிறு முதல் 04.02.2024 ஞாயிறு வரை)**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. புண்ணிய பலமிக்க பாரதமே
   புதுமை புரட்சி பலமிக்க தமிழகமே
   அண்ணல் அரங்கஞானி கேட்க
   ஆற்றலுடன் அகத்தியமகரிஷி யானும்
2. யானும் இந்தியா தமிழகத்தின்
   எதிர்கால பலன்குறித்த ஆசி
   ஞானம்பட சோபகிருது கலைதிங்கள்
   நல்முன்னான்கீர் திகதிமேல் மூவேழு திகதிவரை
3. வரை நடக்கும் வார நிகழ்வாக
   வார ஆசிதனை உரைப்பேன்
   மறைபோற்றும் உயர் நிகழ்வாக
   மகா சக்திமிகு விழா தன்னை
4. தன்னையே இந்திய தேசம் கண்டு
   தரணி வியக்க தெய்வ சக்திகள்
   அண்ணலாய் இறங்கிட மாற்றம்
   அகிலம் போற்ற நடந்தேறும்
5. நடந்தேறும் மதம் கடந்து உலகில்
   நம்பிக்கை இறைவழி கொண்ட
   நாடெங்கிலும் பாதுகாப்பு வளர்ச்சி
   நல்ல தேற்றமாக உருவாகும்
6. ஆகவே இதன் அருமை உணரா
   அஞ்ஞானவான்கள் செயல்கள்
   வகைபடா பின்னடைவாகி நின்று
   வளர்ச்சிகளும் முடங்க நேரும்

7. நேருமை கொண்ட அரசியல் சூழலும்
நிர்வாகம் நீதி செயல்பாடுகளென
வருங்காலம் வளர்ச்சி நோக்கமாக
வையகம் பின்பற்றுகின்ற வண்ணம்
8. வண்ணமுடன் மாற்றம் காணும்
வருகின்ற ராமபிரான் கோட்டவிழா
எண்ணம் தூய்மை உலக சேமமென
எல்லா வகை சுத்திகளும் செய்து
9. செய்துமே நன்மை புரியும்
சிறப்பாக மகாசக்திகள் ஞானிகள்
மெய்ஞானப் படைகள் வெளிப்பட
மண்ணுலகில் தமிழக இந்திய
10. இந்திய ஆளுமைகள் தனக்கு
இயல்பான தருமநெறி வகையான
சிந்தை மாற்றும் சேவை நோக்கேயான
சிறப்பான ஆட்சிக்காலமாக மாறும்
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சோபகிருது வருடம் தை மாதம் 14ம் நாள் 28.01.2024 ஞாயிற்றுக்கிழமை முதல் தை மாதம் 21ம் நாள் 04.02.2024 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகள் :

புண்ணிய பலம் மிகுதியாக உள்ள பாரத தேசமே புதுமைகளையும், பல புரட்சிகளையும் செய்து மேம்பட்டு நிற்கின்ற தமிழகமே இதன் எதிர்காலம் குறித்து ஆறுமுக அரங்க மகா தேசிகனார் அகத்திய மகரிஷி எம்மிடம் கேட்க அகத்திய மகரிஷி யானும் சோபகிருது வருடம் தை மாதம் 14ம் நாள் 28.01.2024 ஞாயிற்றுக்கிழமை முதல் தை மாதம் 21ம் நாள் 04.02.2024 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகளை வார ஆசி நூலாக உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

வேதங்கள் போற்றும் வகையிலே உயர்வான நிகழ்ச்சியாக சக்தி மிக்க பெருவிழாவாக இந்திய தேசம் காணப் போகிறதப்பா. உலகமே வியக்குமாறு

பல தெய்வீக சக்திகள் அவ்விழாவிலே இறங்கி கலந்து பல மாற்றங்களை உலகமே போற்றும்படி நடந்தேறுமப்பா. அந்த விழா மதங்களுக்கு அப்பாற்பட்டு நடக்குமப்பா வேற்று மதத்தவர்களும் இவ்விழாவைக் கண்டு கடவுள் நம்பிக்கை கொள்வார்கள். கடவுளின் அற்புத சக்தியாலே இனி நாடெங்கிலும் பாதுகாப்பு பெருகிடும் வளர்ச்சியும் உண்டாகும் நல்ல முன்னேற்றங்கள் கடவுள் அருளால் இனி வரும் காலமெல்லாம் உண்டாகி நாடெங்கிலும் கடவுள் பக்தி மக்களிடையே அதிகமாகும்.

இந்த விழாவின் அருமைகளை ஒரு சிலர் உணராமல் கடவுள் வழிபாட்டினை குறைபாடாக சொல்லியும் தவறான கண்ணோட்டத்தில் பார்த்தும் தவறான கருத்துகளை பரப்பினால் அவர்கள் மக்களிடையே செல்வாக்கை இழந்து வளர்ச்சி குன்றி பின்னடைவை சந்திக்க நேருமப்பா.

இனி வரும் காலம் தேசத்தினிலே நேர்மை மிக்க அரசியல் சூழல் உருவாகும் நிர்வாகம் சீர்படும் நீதி நிலைநிறுத்தப்படும் செயல்பாடுகள் சிறப்புடன் இருக்கும் வளர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு செயல்பாடுகள் நடக்கும் பிற நாடுகளும் பின்பற்றும் வகையிலே இந்திய தேசத்தின் செயல்பாடுகள் உருவாகும்.

அத்தகைய சிறப்பு மிக்க இராமபிரான் கோவில் விழா உலக மக்களுக்கு நல்ல எண்ணத்தையும், தூய்மையையும் உலக நலத்தையும் உருவாக்கும் வகையிலே தெய்வீக சக்திகள் தேசத்தில் இறங்கி தேசத்தை எல்லா வகையிலும் சுத்தம் செய்து நன்மை புரியும்.

சிறப்பான வகையிலே மெய்ஞான படைகள் தேசத்தில் வெளிப்படும் மகா சக்திகளும் வெளிப்படும் ஞானிகளும் வெளிப்படுவார்கள் ஆதலினாலே இந்தியா தமிழகத்தில் ஆட்சி புரிவோர் இனி வரும் காலம் தரும நெறியில் சென்று நன்மை புரியும் வகையிலே சிந்தை தெளிவு பெறுவார் சேவை நோக்கத்துடன் செயல்படுவர் இனி வரும் காலம் சிறப்பான காலமாக மாற்றம் பெறும் எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–